<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

நாள் 16.07.2026

அசல் வழக்கு எண்.158/2023

பி.சா. 2. – கனிஷ்கா க/பெ. செல்லகுமார் முதலியார் என்பவரை வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) நான் இவ்வழக்கின் 2ம் பிரதிவாதி செல்லகுமாரின் மனைவி என்றால் சரிதான். எனது கணவர் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.2 குத்தகை ஒப்பந்தத்தில் 1ம் பிரதிவாதி மற்றும் 2ம் பிரதிவாதிதான் தரப்பினர்கள் என்றால் சரிதான். மேற்படி உடன்படிக்கை விவரங்கள் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. மேற்படி உடன்படிக்கை குத்தகை காலம் எவ்வளவு நாள் என்றால் 11 மாதம் ஆகும். எந்த தேதியில் ஆரம்பித்து எந்த தேதியில் முடிவடைகிறது என்றால் 12.01.2022- 11.12.2022 வரை ஆகும். வீடு குத்தகை முன்பணம் ரூ.5 லட்சத்தை 1ம் பிரதிவாதியிடம் தான் கொடுத்துள்ளோம் என்று சொன்னால் சரிதான். வாதிக்கும் எங்களுக்கும் நேரடியான தொடர்பு இல்லை என்றால் அவர்களுடன் ஆவணம் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. வாதியை எனக்கு தெரியும். வாதியை எப்படி தெரியும் என்றால் வாதிதான் மேற்படி வீட்டின் உரிமையாளர் ஆவார். அதனால் வீட்டிற்கு 14.01.2022அன்று வந்து எங்களுடன் பேசியுள்ளார். நாங்கள் வாதிக்கு வாடகை பணம் செலுத்தியுள்ளோமா என்றால் இல்லை. நாங்கள் குத்தகைக்குத் தான் 1ம் பிரதிவாதி மூலமாக இருந்து வருகிறோம். 1ம் பிரதிவாதியிடம் ரூ.5 லட்சம் எவ்வாறு கொடுக்கப்பட்டது என்றால் பணமாக எனது கணவர் கொடுத்தார் அப்போது நான் உடன் இருந்தேன். வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் குத்தகை உடன்படிக்கை வழக்கு சொத்தை பொறுத்துள்ளது பற்றி தெரியுமா என்றால் தெரியும். மேற்படி விவரம் எப்போது தெரியும் என்றால் எனது கணவர் 1ம் பிரதிவாதியிடம் ரூ.5 லட்சம் பணம் கொடுத்தபோது தெரியும். அவரது ஒப்பந்தத்தில் 3ம் தரப்பினருக்கு குத்தகை அல்லது வாடகை விடலாம் என்பதாக சொல்லப்பட்டுள்ளது. அதன்படியாக தான் 1ம் பிரதிவாதி எங்களுக்கு இடத்தை குத்தகைக்கு விட்டார். எந்த தேதியில் பணம் கொடுக்கபட்டது என்றால்

12.01.2022. மேற்படி ரூ.5 லட்சம் பணம் கொடுத்ததற்கு வேறு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. ஒப்பந்தம் மட்டும்தான் உள்ளது. வாதி 1ம் பிரதிவாதியிடமிருந்து நாங்கள் கொடுத்த ரூ.5 லட்சத்தை வாங்கினாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் வாதிக்கு முன் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனக்கும் வாதிக்கும் வாடகை அல்லது குத்தகை ஒப்பந்தம் நேரடியாக இல்லை என்றால் சரிதான். குத்தகை காலம் டிசம்பர் 22ல் முடிந்து விட்டது என்றால் சரிதான். குத்தகை காலம் முடிந்த பின்னரும் நாங்கள் மேற்படி வீட்டில் சட்டத்திற்கு விரோதமாக குடியிருந்துவருகிறோம் என்றால் சரியல்ல. எங்களது குத்தகை பணத்தை 1ம் பிரதிவாதி திரும்ப தரவில்லை என்பதால் குடியிருந்து வருகிறோம்.நாங்கள் வாதிக்கு எதிராக அ.வ.எண். 229/2023 என்ற வழக்கினை பல்லாவரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் 1ம் பிரதிவாதி மற்றும் வாதி மீது தாக்கல் செய்துள்ளோம். எங்களது குத்தகை பணத்தை 1ம் பிரதிவாதிதான் கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மீது நான் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் 1ம் பிரதிவாதி நிறைய நபர்களை ஏமாற்றிவிட்டு தலைமறைவாகிவிட்டார். அவர் மீது நடவடிக்கை கோரி தாம்பரம் காவல்கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. அவரை போலீசார் தேடி வருகிறார்கள். அவ்வாறு புகார் கொடுத்த ஆவணம் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது கணவர் 1ம் பிரதிவாதியுடன் சேர்ந்து வாதியை ஏமாற்றும் நோக்கில் அவரது வீட்டை காலி செய்யமால் குடியிருந்துவருகிறோம் என்றால் சரியல்ல. நாங்கள் குத்தகை காலம் முடிந்த பின்னரும் வாதியின் வீட்டில் குடியிருந்து வருவதால் அவருக்கு மாத வாடகையாக ரூ.45ஆயிரம் கொடுக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வாடகை பாக்கி தொகையாக ரூ.1,74,500/- உள்ளது என்றால் சரியல்ல. வாதியின் வீட்டை காலி செய்து அவரிடன் ஒப்படைக்ககோரியுள்ள வாதியின் பரிகாரம் கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-A.Mohamed Ali,

Additional Subordinate Judge,

Kancheepuram.